## வினைமுற்று, எச்ச வகைகள்

## வினைமுற்றென்பது யாது?

ஒரு வாக்கியத்தில் குறிப்பிடும் செயல்/ பயநிலை முடிவு பெற்றிருந்தால் அது வினை முற்று என்று வழங்கப்படும்.:-

எடுத்துக் காட்டு:

படித்த மாணவன் - படித்த என்பது மாணவனெனும் பெயரினை சுட்டுவதால் பெயரெச்சம் எனப்படும்.
படித்துச் சென்றான் - படித்து என்பது சென்றானெனும் வினையைச் சுட்டுவதால் வினையெச்சம் எனப்படும்.
மாணவன் படித்தான் - இதில் மாணவன் செய்த செயலை முற்றுபெற சொல்வதால் வினைமுற்று எனப்படும்.

www.tamilgk.com

I. குறிப்பு வினைமுற்று:

அவன் நல்லவன் - என்பதில் நல்லவன் நல்லவன் என்பது போல காலங்காட்டா வினைமுற்றுகள் உண்டு. அவை குறிப்பு வினைமுற்று எனப்படும். பெயர் அடியாகப் பிறந்து காலம் காட்டாத குறிப்பு வினைமுற்றுகள் கீழ்வருமாறு:- -

எடுத்துக்காட்டு:-

- நீர்த்து, உடைத்து, நன்று, இல்லை, வேறு, இனிது, உண்டு, இன்று, மருகனை, உளன்.

II. மூன்றிடத்தும் பொருந்தும் வினைமுற்றுகள்:-

1. தன்மை வினைமுற்று:

உரைத்தனென், இருந்தனென், போற்றுகேன், செய்கேன், நோற்றிலேன், யாத்திலேன், பார்த்தனென் - இவையனைத்தும் தன்மையிடத்தைக் கூறும் தன்மை வினைமுற்றுகளாம்.

2. தன்மைப் பன்மை வினைமுற்று:

தேர்ந்திலம், அறிவாம், தெரிதும், ஆற்றுதும் - இவையனைத்தும் தன்மையிடத்தில் வரும் பன்மை வினைமுற்றுகள்.

3. முன்னிலை ஒருமை வினைமுற்று:

கொன்றனை, பார்த்தனை, செய்தாய், குடித்தாய், வருதி, இசைத்தி, கேட்டி, கோடி, காண்டி, உரைத்தி, கிடத்தி - இவையனைத்தும் முன்னிலை ஒருமை வினைமுற்றுகளாம்.

4. முன்னிலைப் பன்மை வினைமுற்று:

சென்றீர், செல்வீர் - என்பனயாவும் முன்னிலைப் பன்மை வினைமுற்றுகளாம்.

5. படர்க்கை வினைமுற்று:

படர்க்கையிடத்தில் உள்ள அய்ந்து பால்களிலும் வருபவை படர்க்கை வினைமுற்றுகளாம்.

- எடுத்துக்காட்டு:
  "வந்தான் - ஆண்பால்"

www.tamilgk.com

"வந்தாள், படித்தாள் - பெண்பால்",
"எய்தின்று, வந்தது, முதற்று, தைத்தன்று -
ஒன்றன்பால்",
"முதல், நீர, போன்ற, வந்தன - பலவின்பால்",
"சோகாப்பர், எய்துப, ஆப, உணர்ப, வந்தனர் -
பலர்பால்", "

## எதிர்மறை வினைமுற்று:-

எதிர்மறைப் பொருளை உணர்த்தும் வினைமுற்றுகளான - நேரா, கடவார், துஞ்சேல், நீங்கா, தெரிந்திலன், அறிகிலேன் - போன்றவை எதிர்மறை வினைமுற்றுகள் எனப்படும்.

www.tamilgk.com

## ஏவல் வினைமுற்று:-

முன்னிலையில் ஆணையிடுவதாக வரும் சொற்கள் ஏவல் வினைமுற்றுகள் எனப்படும்.

- எடுத்துக்காட்டு:
  நட, வா, போ - வெறும் பகுதி மாத்திரம்
  தேற்றாய், வருதி - ஆய், இ விகுதியுடைச் சொற்கள்
  உண்ணல், உண்ணேல், மறால், உண்ணாதி, உண்ணாதே
  -
  அல், ஆல், ஏல், இ, ஏ விகுதியுடைச் சொற்கள்
  பெறுமின், கூறுமின், உண்ணீர், உண்ணும் -
  மின், ஈர், உம் - விகுதியுடைச் சொற்கள்

## வியங்கோள் வினைமுற்று:-

ஆணையிடுவது போலல்லாமல் வேண்டுகோளைப் போன்று தொனிக்கும் வினைமுற்றுகள் இவை.

- எடுத்துக்காட்டு:
  வாழ்க, நிற்க, தொடங்கற்க - "க" விகுதி
  வாழிய - "இய" விகுதி
  வாழியர் - "இயர்" விகுதி
  எனல் - "அல்" விகுதி

## எச்சங்களின் விளக்கம்

www.tamilgk.com

சில நேரங்களில் ஒரு வாக்கியத்தில் இரண்டு வினைமுற்றுகள் இருப்பது போன்று வருவதுண்டு. அதில் முதலில் வரும் வினைமுற்று முற்றெச்சம் என்று வழங்கப்படுகிறது:-

எடுத்துக் காட்டு:
கண்டனன் வணங்கினான்- கண்டனன் என்பது முற்றெச்சம்.
உடையினன் தோன்றினன் - உடையினன் என்பது முற்றெச்சம்.
உவந்தனன் ஏத்தி - உவந்தனன் என்பது முற்றெச்சம்

### பெயரெச்சம்

பெயரைக் கொண்டு முடிவுறும் காலங்காட்டுகின்ற, முற்றுபெறா வினைச் சொற்கள் பெயரெச்சங்களாம்:-

- எடுத்துக்காட்டு:
  உண்ட கண்ணன் - உண்ட என்பது இறந்தகாலம் காட்டும் பெயரெச்சம்
  உண்ணுகின்ற பொருள் - உண்ணுகின்ற என்பது நிகழ்காலம் காட்டும் பெயரெச்சம்

உண்ணும் வேளை - உண்ணும் என்பது எதிர்காலம் காட்டும் பெயரெச்சம்
எனல் - "அல்" விகுதி

## ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

பெயரெச்ச வகைகளில் "ஆ" என்னும் எழுத்தில் முடிகின்றவையும் எதிர்மறைப் பொருளைத் தருகின்றவையும் அடுத்த சொல்லைப் பெயர்ச்சொல்லாய் கொண்டு முடிபவையும் ஏறக்குறைய ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சங்களாகும்:-

- எடுத்துக்காட்டு:
  எய்துவர் எய்தாப் பழி - எய்தா என்பது ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
  நாறா மலரனையர் - நாறா என்பது ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

www.tamilgk.com